வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-செங்கேணி பழனி

தேதி 09.09.2024 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், **அபுதாபி பட்டத்து இளவரசருடன்** இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.

**சுகோய்-30** ரக விமானங்களுக்கு தேவையான 240 **ஏரோ-இஞ்சின்களை**, 26 ஆயிரம் கோடி ரூபாய் விலையில் வாங்க, பாதுகாப்பு அமைச்சகம், **HAL** நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

**குரங்கம்மை** நோய் இருப்பதாக சந்தேகிக்கப்படும் அனைவரையும் பரிசோதிக்க, மத்திய அரசு, அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு அறிவுறுத்தி உள்ளது.

புதுச்சேரியில், **தமிழ்நாடு காவிரி விவசாயிகள் சங்கத்தினர்** இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமியை சந்தித்து, மேகதாதுவில் அணை கட்டும் கர்நாடகத்தின் முயற்சிகளை, தடுக்கக் கோரினர்.

---------------------------

*பட்டத்து இளவரசர் 1 (18)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், அபுதாபி பட்டத்து இளவரசர் **ஷேக் கலேத்-பின் முகமது-பின் ஜாயேத் அல்-நஹ்யான்** உடன், இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார். இந்தியாவிற்கும், ஐக்கிய அரபு எமிரேட்டுகளுக்கும் இடையிலான பன்முக உறவுகள் குறித்தும், உறவுகளை புதிய துறைகளுக்கு விஸ்தரிப்பது குறித்தும், இரு தலைவர்களும் விவாதித்தனர். இப்பேச்சு வார்த்தைகளை

தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையே, 5 உடன்பாடுகள் கையெடுத்தாயின. அபுதாபியில் உள்ள பராக்கா அணுமின் நிலையத்தை இந்திய அணுசக்திக் கழகத்தின் உதவியுடன் பராமரிப்பது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமும், அபுதாபி தேசிய எண்ணெய் நிறுவனத்திடம் இருந்து, நீண்டகால அடிப்படையில் LNG எரிவாயு பெறுவது தொடர்பான உடன்பாடும் இதில் அடங்கும். தொடர்ந்து அபுதாபி பட்டத்து இளவரசர் ராஜ்காட் சென்று, மகாத்மா காந்தி சமாதியில் அஞ்சலி செலுத்தினார். நேற்று முதல், இந்தியாவில் முதல்முறையாக பயணம் மேற்கொண்டுள்ள அபுதாபி பட்டத்து இளவரசர், நாளை மும்பையில், இருநாட்டு வர்த்தகத் தலைவர்களின் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார். இந்தியாவிற்கும், ஐக்கிய அரபு எமிரேட்டுகளுக்கும் இடையிலான வர்த்தகம், கடந்த 2022-23ஆம் ஆண்டில், 85 பில்லியன்

*பட்டத்து இளவரசர் 2 (7)*

டாலராக அதிகரித்து, இந்தியாவின் 3ஆவது மிகப் பெரிய வர்த்தகக் கூட்டாளி நாடாக, ஐக்கிய அரபு அமீரகம் மேம்பட்டுள்ளது. இந்தியாவிற்கும், ஐக்கிய அரபு எமிரேட்டுகளுக்கும் இடையே, வரலாற்று காலத்தில் இருந்தே நெருங்கிய நட்புறவு உண்டு என்பதும், அண்மைக் காலங்களில், வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, தொழில்நுட்பம், கல்வி, கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில், இருதரப்பு உறவுகள் ஆழமாகி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

--------------------------

*ஏரோ – இஞ்சின் (11)*

இந்திய விமானப் படையின் சுகோய்-30 ரக விமானங்களுக்கு தேவையான 240 ஏரோ-இஞ்சின்களை, மொத்தம் 26 ஆயிரம் கோடி ரூபாய் விலையில்  வாங்க, பாதுகாப்பு அமைச்சகம், பொதுத் துறை ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. HAL நிறுவனத்தின் கோராப்புட் உற்பத்திப் பிரிவில், அடுத்த 8 ஆண்டுகளில் தயாரிக்கப்பட உள்ள இந்த இஞ்சின்களால், சுகோய்-30 ரக விமானங்களின் செயல்பாட்டுத் திறனும், பாதுகாப்பு தயார் நிலையும், அதிகரிக்கும் என, பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தயாரிப்புப் பணிகளில், பொதுத் துறை மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த சிறு-குறு-நடுத்தர தொழில் நிறுவனங்களின் ஆதரவை, HAL நிறுவனம் கோரிப் பெறும் என்பதால், சுயசார்பு இந்தியா இயக்கமும் வலுப்பெறும்.

---------------------------

*கப்பல் (11)*

ஆழமற்ற கடல் பகுதியில் நீர்மூழ்கிக் கப்பல்களை எதிர்த்து போரிடத் தக்கதாக, முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு, தயாரிக்கப் பட்டுள்ள, 2 போர் கப்பல்கள், கேரள மாநிலம் கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் இன்று தொடக்கி வைக்கப் பட்டுள்ளன. இந்திய கடற்படைக்காக தயாரிக்கப் பட்டுள்ள இவ்விரு கப்பல்களுக்கு, ஐஎன்எஸ்-மால்பே, ஐஎன்எஸ்-முல்கி எனப் பெயரிடப் பட்டுள்ளது. நீருக்கு அடியிலான கண்காணிப்புப் பணிகள், மற்றும், தேடுதல்-மீட்புப் பணிகளுக்கும், இக்கப்பல்கள் உதவிகரமாக இருக்கும் என சம்பந்தப்பட்ட

வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தெற்கு மண்டல கடற்படைத் தலைவர் வைஸ் அட்மிரல் வி. ஸ்ரீனிவாஸ், கொச்சி கப்பல் கட்டும் தளத்தின் மேலாண் இயக்குநர் திரு. மது எஸ். நாயர் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

---------------------------

ஒப்பந்தம் (11)

பாதுகாப்புப் படையினர் மற்றும் தளவாடங்களின் போக்குவரத்துத் தேவைகளுக்கான திட்டங்களை தயாரித்து செயல்படுத்துவதில், பாதுகாப்புப் படையினரின் திறன்களை மேம்படுத்துவது தொடர்பாக, இந்திய ராணுவமும், விமானப் படையும், கதி சக்தி பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. இன்று புதுடெல்லியில், பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், நவீன தொழில்நுட்பங்களின் அடிப்படையிலான கல்வி, ஆராய்ச்சி, மற்றும், புதுமைகளை பாதுகாப்புப் படையினருக்கு வழங்குவதில் முக்கிய கூட்டாளியாக, கதி சக்தி பல்கலைக்கழகம் செயல்படும் என்று கூறினார்.

---------------------------

*சுகாதார அறிக்கை 1 (18)*

நாட்டின் சுகாதார அமைப்பும், மனித வளமும், மாறி வரும் சுகாதார நிலைமைகளுக்கு ஏற்ப மேம்படுத்தப்படுவது குறித்த ஆண்டறிக்கையை, மத்திய சுகாதாரத் துறைச் செயலர் திரு. அபூர்வ சந்திரா புதுடெல்லியில் இன்று வெளியிட்டார். கடந்த ஆண்டு மார்ச் 31ஆம் தேதி நிலவரப்படி,

நாட்டில் 32 ஆயிரம் ஆரம்ப சுகாதார மையங்கள், 6 ஆயிரத்து 359 சமூக சுகாதார மையங்கள், மற்றும், சுமார் 1 லட்சத்து 69 ஆயிரம் துணை மையங்கள், கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு சேவை புரிந்து வருவதாக இந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இது அல்லாது 714 மாவட்ட மருத்துவமனைகள், 362 மருத்துக் கல்லூரிகள், மற்றும், ஆயிரத்து 340 துணைக் கோட்ட மருத்துவமனைகளும் நாட்டில் செயல்பட்டு வருகின்றன. இம்மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள், சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள், மற்றும், இதர சுகாதார ஊழியர்கள் எண்ணிக்கை பற்றிய விவரங்களும், அறிக்கையில் இடம்பெற்றுள்ளன. தேசிய சுகாதார இயக்கத்தின் இலக்குகளுக்கு ஏற்ப, சுகாதார கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதில், இந்த அறிக்கை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று, திரு. அபூர்வ சந்திரா, நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார். சுகாதார மேலாண்மைக்கான தகவல் இணைய தளத்தை, அமைச்சகத்தின் இதர

*சுகாதார அறிக்கை* 2 (4)

இணைய தளங்களுடன் ஒருங்கிணைக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். இதனால் சுகாதாரப் பணியாளர்களின் பணிச் சுமை குறைவதுடன், தரவுகளை உடனுக்குடன் பதிவேற்றிப் பகுப்பாய்வு செய்யவும், ஏதுவாகும் என்று அவர் தெரிவித்தார்.

--------------------------

*குரங்கம்மை 1 (18)*

எம்-பாக்ஸ் என்னும் குரங்கம்மை நோய் இருப்பதாக சந்தேகிக்கப்படும் அனைவரையும் பரிசோதிக்க, மத்திய அரசு, அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு அறிவுறுத்தி உள்ளது. குரங்கம்மை நோயை, சர்வதேச அளவில் கவலைக்குரிய பொது சுகாதார அவசர நிலையாக, உலக சுகாதார நிறுவனம் அறிவித்து இருப்பதை கருத்தில் கொண்டு, மத்திய சுகாதார துறைச் செயலர் திரு. அபூர்வ சந்திரா, மாநில அரசுகளுக்கு இவ்வாறு அறிவுறுத்தி உள்ளார். குரங்கம்மை நோய் குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மக்களிடையே பீதி ஏற்படாமல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், நோய் பாதிப்பு ஏற்பட்டவர்கள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் அரசுக்கு தெரிவிக்கவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. மாநில மற்றும் மாவட்ட நிலையிலான பொது சுகாதார தயார் நிலையை, உயர்நிலை அதிகாரிகள் மூலம் மறு ஆய்வு செய்யவும், நோயாளிகளை தனிமைப்படுத்த மருத்துவமனைகளில் போதிய வசதிகளை உருவாக்கவும், பயிற்சி பெற்ற மனித வளத்தை போதிய அளவில் பராமரிக்கவும் அமைச்சகம் அறிவுறுத்தி உள்ளது. குறிப்பாக, தோல் நோய், பாலியல் நோய்கள், மற்றும், எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள சுகாதார ஊழியர்கள், பாதுகாப்பு விதிமுறைகளை முற்றிலுமாக கடைபிடிக்க

குரங்கம்மை 2 (4)

வேண்டும் என்றும், அறிவுறுத்தப் பட்டுள்ளது. மத்திய சுகாதார அமைச்சகம், நிலைமைகளை தொடர்ந்து கண்காணித்து, மாநில மற்றும்

யூனியன் பிரதேச அரசுகளுக்கு தேவையான உதவிகளை வழங்கும் என்றும், திரு. அபூர்வ சந்திரா தெரிவித்துள்ளார்.

---------------------------

செல்லான் நாயக்கர் (7)

புதுச்சேரியில், செவாலியே செல்லான் நாயக்கர் பிறந்தநாள், அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது. சட்டப் பேரவை வளாத்தில், அலங்கரித்து வைக்கப் பட்டிருந்த அன்னாரின் திருவுருவப் படத்திற்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு, எதிர்கட்சித் தலைவர் திரு. ஆர்.சிவா, சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ்.பி ரமேஷ் ஆகியோர், மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

---------------------------

*ரங்கசாமி-விவசாயம் (19)*

புதுச்சேரியில், தமிழ்நாடு காவிரி விவசாயிகள் சங்கத்தின் தலைவர் திரு. பிஆர். பாண்டியன் தலைமையில், விவசாயிகள் இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமியை சந்தித்து, காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டுவதற்கான கர்நாடக அரசின் முயற்சிகளை, தமிழக அரசும், புதுச்சேரி அரசும் இணைந்து தடுக்க வேண்டும் என மனு கொடுத்தனர். 2 வாரங்களுக்கு முன்னர் மேட்டூர் அணை நிரம்பி, உபரி நீர் கடலுக்கு சென்றதை கர்நாடக அரசு தனக்கு சாதகமாக்கிக் கொண்டு, மேகதாது அணை கட்ட அனுமதி கோரி மத்திய அரசை நிர்பந்தித்து வருவதாகவும், அணை கட்டிவிட்டால், உபரி நீர் தமிழகத்திற்கு வருவதையும், தடுத்து விடலாம் என்பதே கர்நாடக அரசின் உள்நோக்கம் என்றும், திரு.

பாண்டியன் கூறினார். நாளை, தமிழ்நாடு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரை முருகனை தாங்கள் சந்தித்து மனு கொடுக்க உள்ளதாகவும். தேவைப்பட்டால், தமிழ்நாடு -புதுச்சேரி அனைத்து கட்சிகள் கூட்டத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். தமிழகத்தில், ஒகேனேக்கல் அருகே ராசிமணலில் அணை கட்ட, ஏற்கனவே தமிழக அரசு எடுத்த நடவடிக்கை மீண்டும் தொடர வேண்டும் என அவர் வலியுறுத்தினார். இத்திட்டம் தொடர்பாக ஒத்த கருத்தை உருவாக்க, தமிழக அரசு போர்க் கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

---------------------------

*ஏனாம்* (6)

ஏனாமில் உள்ள ஜவஹர் நவோதயா பள்ளியில், இவ்வாண்டு 12ஆம் வகுப்பு முடித்த மாணவ-மாணவிகளில் நால்வருக்கு, புதுச்சேரி இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரியிலும், ஒரு மாணவருக்கு, கரக்பூர்-ஐஐடி உயர்கல்வி நிறுவனத்திலும் இடம் கிடைத்து இருப்பதாக, பள்ளியின் பொறுப்பு முதல்வர் திரு. ராஜசேகர ரெட்டி தெரிவித்துள்ளார். இன்று ஏனாமில் நடத்திய செய்தியாளர் கூட்டத்தில் அவர் இதை தெரிவித்தார்.

---------------------------

*வானிலை 1 (12)*

வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, இன்று, ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுவடைந்து, இன்று நண்பகல் வாக்கில், ஒடிசா மாநிலம்

புரி அருகே, கரையை கடந்தது. இது வடமேற்கு திசையில் மேலும் நகர்ந்து, இன்று நள்ளிரவு வாக்கில், காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுக் குறையக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம், தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், மணிக்கு 40 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில், வலுவான தரைக் காற்று வீசக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. தமிழகம், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், வரும் 15 ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

--------------------------

*மருத்துவர் வழக்கு (12)*

கொல்கத்தா ஆர்ஜி கர் மருத்துவமனையில், பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்யப்பட்டது குறித்து, பாரபட்சமற்ற விசாரணைகளை உறுதிப்படுத்த ஏதுவாக, மேற்குவங்க முதலமைச்சர் செல்வி. மம்தா பேனர்ஜி ராஜினாமா செய்ய வேண்டும் என பிஜேபி கோரியுள்ளது. அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் திரு. கவுரவ் பாட்டியா, இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு வலியுறுத்தினார். இதற்கிடையே, பெண் மருத்துவர் கொலை குறித்து, சிபிஐ, வரும் 17ஆம் தேதிக்குள், புதிய புலனாய்வு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என, உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தலைமை நீதிபதி திரு. சந்திர சூட் தலைமையிலான அமர்வு, இந்த வழக்கு

மீதான இன்றைய விசாரணைகளின் போது, இவ்வாறு உத்தரவிட்டு, அடுத்தகட்ட விசாரணைகளை, வரும் 17ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தது.

---------------------------

பௌத்த மாநாடு (9)

2ஆவது சர்வதேச பௌத்த ஊடகங்கள் மாநாடு, புதுடெல்லியில், வரும் 11ஆம் தேதி நடைபெற உள்ளது. விழிப்பு நிலைத் தகவல் தொடர்பு மூலம் பிணக்குகளை தவிர்த்தலும், நீடித்த வளர்ச்சியும் என்ற கருப்பொருள் அடிப்படையில், இம்மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. பௌத்த மத போதனைகளை, நவீன ஊடக நடைமுறைகளுடன் ஒருங்கிணைப்பதன் மூலம், உலகளாவிய பிரச்சனைகளை சமாளிப்பது குறித்தும், ஊடக அமைப்புகள் மீதான நம்பிக்கையை மேம்படுத்துவது குறித்தும், இம்மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்படும். 18 நாடுகளில் இருந்து, ஊடகப் பிரதிநிதிகள், மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

---------------------------

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், அபுதாபி பட்டத்து இளவரசருடன் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.

சுகோய்-30 ரக விமானங்களுக்கு தேவையான 240 ஏரோ-இஞ்சின்களை, 26 ஆயிரம் கோடி ரூபாய் விலையில் வாங்க, பாதுகாப்பு அமைச்சகம், HAL நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

குரங்கம்மை நோய் இருப்பதாக சந்தேகிக்கப்படும் அனைவரையும் பரிசோதிக்க, மத்திய அரசு, அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு அறிவுறுத்தி உள்ளது.

புதுச்சேரியில், தமிழ்நாடு காவிரி விவசாயிகள் சங்கத்தினர் இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமியை சந்தித்து, மேகதாதுவில் அணை கட்டும் கர்நாடகத்தின் முயற்சிகளை, தடுக்கக் கோரினர்.